உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு


துணர் ய௬ { விக்கிரம—ஆடி } மலர் ௪



| | | |
|---|---|---|
| க. | தமிழ்ச் செய்திகளும் குறிப்புகளும்<br>பொழிற்றெண்டர் | 121 |
| உ. | காட்சியளவை<br>திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள், B. A. (Lond.) | 129 |
| ௩. | இறைவன் தரும் இனிமை<br>வித்துவான் திரு. க. வெள்ளைவாரணன் அவர்கள். | 136 |
| ௪. | சிலம்பின் முச்சுவை<br>வித்துவான் திரு. செ. வேங்கடராமச்செட்டியார் அவர்கள். | 140 |
| ௫. | கலிங்கப்போரும், காலிங்க வீரரும்<br>திரு. ஈ. ஆர். நரசிம்மஐயங்கார் அவர்கள், B.A., B.L. | 145 |
| ௬. | "சிருங்கார ரஸம்"<br>பண்டிதர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள். | 151 |
| எ. | பழநிக் கும்பாபிடேகம்<br>திரு. மு. சாமி. சிவராமபிள்ளை அவர்கள். | 158 |
| அ. | நன்கொடைகள்<br>பொழிற்றெண்டர் | 159 |


பொழிற்றொண்டர்:

செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.


கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் யசூ | விக்கிரம—ஆடி | மலர் ச |


உ

## தமிழ்ச் செய்திகளும் குறிப்புகளும்.

பொழிற்றொண்டர்

கண்ணகன் ஞாலத் தெண்ணில்பல் கோடிப்
பிள்ளைகள் பெற்ற பெருமனைக் கிழத்திக்கு
நெல்லிரு நாழி நிறையக் கொடுத்தாங்
கெண்ணுன் கறமு மியற்றுதி நீயென
வள்ளன்மை செலுத்து மொண்ணிதிச் செல்வ !

—தமாதநபார்.

யாம் நமது சங்கத்தின் வளங் கருதி ஆழ்ந்த நினைவில் இருந்த பொழுதில் இந்த அடிகள் எம் நினைவுக்கு வந்தன. பேருவகை அளித்தன. கொண்ட நினைவுக்கு மிகமிகப் பொருத்தமா யிருந்தன.

வள்ளன்மை செலுத்தியவர், எவர் எது வேண்டினும் தர வல்ல பெருநிதிச் செல்வர்; வள்ளன்மைக்கு உரியரானவர், எண்ணில் மக்களைப் பெற்ற பெருங்குடிப் பெண்மகள்; வள்ளல் கொடுத்தது இருநாழி நெல்லே. இதுகொண்டு பிள்ளைகள் வளர்வது மட்டுமல்ல, முப்பத்திரண் டறங்களும் குறைவற நடக்கின்றன.

இப்படித்தான் நம் சங்கத்தின் நிலைமையும் இருக்கின்றது. சங்கப் பெருங் குடித்தனக்காரிக்குப் பிள்ளைகள் பலர். பொதுவாகத், தமிழ் வளர்ச்சி; இதற்குச் சிறப்பாகப், பெரியதொரு நூல் நிலையம்; தொடக்கக் கல்லூரியொன்று; திக்கற்ற மாணவர் இல்லம்; இலவச மருத்துவ சாலை; உயர்தரப் படிப்புக்கெனச் செந்தமிழ்க் கல்லூரி; செந்தமிழ் நடையைப் பரப்புவதற்கெனத் **தமிழ்ப் பொழில்** என்னும் ஒரு திங்கட் டாள்; இன்னும் பிற. எத்தனை பொருள் வேண்டினும் தரவல்ல பெருங் குடி மக்களே யாவரும்; இப்பெருங் குடிமக்களுள் இப்போது ஈயும் வள்ளல்கள் சிலரே; இந்தச் சிலர் ஈவதும் ஒரு காசு, இரு காசு, சிலகாசே. இதைக்கொண்டே சங்கத்துப் பல அறங்களும் நடைபெறுகின்றன.

ಌ ಌ ಌ ಌ

இந்த நினைவு இன்னொரு பழ நினைவில் ஆழ்த்திவிட்டது. நமது சங்கம் தொடங்கிய பின் முதலாண்டு நிறைந்தது. ஆண்டு விழாக்கொண்டாட எண்ணினோம். விழாச் செலவுக்கெனப் பொருள் தேடப் புறப்பட்டோம். உண்மைத் தமிழன்பர் ஒருவரிடம் சென்றோம். அவரும் ஒரு பெருநிதிச் செல்வரே; தூய உள்ளம் படைத்தவர்; தமிழ் வளர்ச்சியிற் பெருவகை கொண்டவர்; இன்மொழி கூறி எம்மை வரவேற்றனர். யாம் சென்ற கருத்தைத் தெரிவிக்கத் தெரிந்த அச்செல்வர், ஒரு வெள்ளித் தட்டில் வெற்றிலை பாக்குடன் ஒரு முழு வெண்பொற் காசு வைத்து, நல்லுரைகூறி, 'இதை வைத்துக்கொண்டு திருவிழாவைச் சிறக்கச் செய்து, செலவுபோக மீதத்தை உங்கள் சேமப் பொருளிற் சேர்த்துக் கொள்ளுங்கள்.' என்று வாழ்த்திக் கொடுத்தனர். அங்ஙனமே ஆண்டுத் திருவிழாக்களும் சிறப்பாக நடந்து வருகின்றன. சங்கத்துச் சேமப் பொருளும் பெருகி வருகின்றது.

ಌ ಌ ಌ ಌ

ஒண்ணிதிச் செல்வர் அருளிய இருநாழி நெல்லும், செந்தமிழ்ப் பெருங்குடி மக்கள் உதவும் ஒரு காசு இருகாசும் எண்

ணளவில் கொஞ்சம்தான். ஆனால் திருவருளும் தூய எண்ணமும் கூடி நிற்றலால், அச்சிறுபொருள் ஆக்கும் பயன் அளவிட முடியாததாகின்றதைக் காண்கின்றோம். ஆதலால் பொருளைக் காட்டிலும் தமிழ் மக்கள் தம் தாய்மொழியிடத்துக் கொள்ளும் அன்பினையும் நல்லெண்ணத்தையுமே யாம் சிறப்பாக வேண்டுகின்றோம்.

ஓ ஓ ஓ ஓ

ஆசிரியர் **கா. சுப்பிரமணிய பிள்ளை** அவர்கள், எம். ஏ., எம். எல்., அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தப் பெற்றமை யறிந்து தமிழுலகம் பெருமகிழ்ச்சி கொள்ளும். வீரத்திரு. (Sir) **கூர்மா வேங்கடரேட்டியார்** அவர்கள் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரானமைக்குப் பெரு மகிழ்வுற்ற மக்களது நெஞ்சம் திரு. பிள்ளையவர்கள் பேராசிரியர் ஆனதறிந்ததும் பின்னும் மகிழும். தமிழ் ஆக்கங் கருதித் திரு. பிள்ளை அவர்களைத் தேர்ந்தெடுத்த நல்லறிவாளர்கட்கு எம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், திரு. பிள்ளை அவர்கள் ஆட்சியில் நம் செந்தமிழ்த் திருமொழி தன் உரிமை முழுதும் பெற்றுச் சிறப்புறும் என்று திண்ணமாய் எண்ணுகின்றோம்.

ஓ ஓ ஓ ஓ

அரசியலார் கலைச் சொல்லாக்கக் குழுவொன்று ஏற்படுத்தினமை குறித்து முன்னர் விரிவாக எழுதியுள்ளோம். பிற மொழிகளிற் போலத் தமிழ் மொழியிலும் கலைச் சொற்களையாக்கப் போதுமான வசதி தேடப் பெறவில்லை யென்பது எம் துணிபு. மதுரைத் தமிழ்ச் சங்கத் துறுப்பினர் ஒருவரை உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டிருப்பதை யாம் பாராட்டுகின்றோம் அதனோடு ஒத்த நிலைமையி லுள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக்கும் தகுந்த மதிப்புத் தராமைக்குப் பொருட்டேதும் காண்கிலேம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து உறுப்பினர் தேர்வில், மதுரைத் தமிழ்ச் சங்கமும், கரந்தைத் தமிழ்ச் சங்கமும் ஒத்த உரிமை பெற்றிருத்தலை அரசியலார் அறிந்திருப்பார்கள் என்று எண்ணுகின்றோம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத் துறுப்பினர் ஒருவரைச் சேர்க்கின், அவர் தமிழ்ப் பற்றுடையவராய்த் தமிழ் மொழி உரிமையை வற்புறுத்துவது திண்ணம். வட மொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவாக வட மொழியிலேயே கலைச் சொற்களை ஆக்கி விடலாமென அரசியலாரேனும், கலைச் சொல்லாக்கக் குழுவினரேனும் நினைப்பார்களாயின், அவர் நினைவு தவறுடைத் தென யாம் மிக்க வன்மையுடன் கண்டிக்கின்றோம்.

ஓ ஓ ஓ ஓ

இதுவேயுமன்றித், தமிழ்மொழியில் கலைச்சொற்களை ஆக்க இயலாதென்றேனும், ஆக்க வல்லுநர் இலரென்றேனும் கொள்ளுதற் கிடனில்லை. இதற்கு முன்னமேயே கலைச்சொல்லாக்கக் குழுவொன்று கூடியதும், பல துறைகளிலும் கலைச் சொற்களாக்கப்பெற்றுச் சுவடி யளவில் வெளிவந்துள்ளதும் யாரும் அறிந்ததே. இத்துறையில் தமது முயற்சியாகவே தனித்தும் தொகுதியாகவும் உழைத்துவரும் அறிஞர் பலரிருப்பவும், அவர்களெல்லாம் இக்குழுவில் இடம்பெறாதது தமிழன்பர்களுக்கு ஒரு குறையாகவே காணப் பெறுகின்றது.

ஓ ஓ ஓ ஓ

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கள் கணக்கு நூல் சார்பான கலைச்சொற்களைத் தூய தமிழில் ஆக்கத் துவங்கி முதற் பகுதியாகத் தந்துள்ள சொற்கள் அடுத்த மலரில் வெளிவரும். அவர்கள்பிற நூல்களைக் குறித் தாக்கிய சொற்களும் இதற்குமுன் வெளிவந்துள்ளன. இதனால் தமிழ்மொழியில் கலைச்சொற்களை ஆக்க இயலாதென்றும், ஆக்க வல்லுநர் இல்லையென்றும் கூறுவார் கூற்று வெற்றுரையாதல் காண்க.

ஓ ஓ ஓ ஓ

வேறு சிலர் தமிழ்ச் சொற்களினும் வடசொற்களே சுருக்கமும் தெளிவும் உடையனவென்று பகடி பேசுவர். இவர் கூற்றும் அறியாமையினாற் பிறந்ததெனச் செந்தமிழ்ப் பெருமகனாகிய மாணிக்க நாயக்கர் பன்முறையும் அறைந்து கூறியுள்

ளார். யாமும் அவர் அறிவுரையை எடுத்துக்காட்டிப் பின்னும் வற்புறுத்துகின்றோம்.

ஈருருளி—துவிசக்கரம். எண்—பூமத்ய ஆகர்ஷண சக்தி.
என்பன அவர்கள் அறிவுறுத்திய எடுத்துக் காட்டுகளுட் சில.

௦ ௦ ௦ ௦

இப்பொழுது நிறுவப் பெற்றுள்ள கலைச்சொல் லாக்கக் குழு தமிழ்மொழியில் சொற்களை ஆக்க முயலும் என்பதில் யாம் மிகுதியும் ஐயுறுகின்றோம். உண்மைத் தமிழ் மக்களும், செந்தமிழ்க் கழகங்களும் எம் கருத்தை ஒப்புவர் என்றும் எண்ணுகின்றோம். ஒப்புவராயின், உண்மைத் தமிழன்பர்களைக் குழுவிற் சேர்க்கவும், தமிழ்மொழியில்—தமிழ் எழுத்தில்மட்டும் அன்று)—கலைச் சொற்களை ஆக்கவும், தமிழ் மக்களும், தமிழ்க் கழகங்களும் அரசியலாரை வற்புறுத்தல் வேண்டும்.

௦ ௦ ௦ ௦

மேல் நாட்டுப் பெரும்போர் உலகத்துக்கே பெருங்கேடு விளைப்பதொன் றென்பது யாவரும் அறிந்தது. தெய்வமென்ப தோர் சித்தமுண்டாகாது, கண்டதே காட்சி கொண்டதே கோலமாக நெறிமுறை பிறழ்ந்து, தாம் நினைத்ததே சட்ட மெனும் கொள்கையுடன், 'வேலொடு நின்றான் இடுவென்றது போலும், கோலொடு நின்றா னிரவு.' என்னும் திருமொழிக்கு எடுத்துக் காட்டாகும் கொடுங்கோலர் திருக்கு மனப்போக் குக்கு நல்லுலகம் பலியாகின்ற தென்னலாம்.

இந்த நிலையில் நன்னெறியாளர் பக்கல் நின்று, 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்னும் மனப் பான்மையுடைய தனித் தமிழ் மக்கள், முறை திறம்பாச் செய லுடையார் பக்கமே துணைநிற்கவேண்டும்.

எவர் எக்கருத்துக்கொண்டு எது கூறினும், செந்நெறியில் முறைசெய்யும் ஆங்கிலப் பெருமக்களே வெற்றிபெற்று செங் கோலாட்சி செலுத்த வேண்டுமென்பதே நாம் கருதுகின்றது. இக்கருத்தையே செந்தமிழ்ப் பெருமக்களிடத்தும் வற்புறுத்து கின்றோம்.

நமது ஆங்கிலப் பெருமக்கள் இடருற்ற இவ்வேளையில், வீரமே மானமும் புகழுமாகக் கொண்ட தமிழ்ப் பெருங்குடி மக்கள், செங்கோல் ஆட்சிக்கு அடங்கிச் சீர்செய்யும் நன்னெறித் தமிழ் மக்கள், தம் உடல் பொருள் ஆவிகளை நம் அரசியலாருக்குத் திறை செலுத்திக் கடனாற்ற வேண்டுமென யாம் பின்னரும் வற்புறுத்துகின்றோம்.

ை ை ை ை

பழந்தமிழன்பருள் ஒருவராகிய திரு. S. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் காலஞ்சென்ற செய்தி, யறிந்து யாம் பெரிதும் வருந்துகின்றோம். தமிழ் பயில்வார்க்குப் பயிலும் வகையினை விரித்துக் காட்டி உதவி புரிந்ததேயன்றி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித் துறையிலும் தொண்டுசெய்து வந்தவர். அவர்களது அறிவுக்கும் ஆற்றலுக்கும் தகுதியான பெருந்தொண்டாற்றிக் கொள்ளப் பெறாத தமிழுலகம் இரங்கத் தக்கதே யாகும். இவர்கள் எழுதிய கட்டுரைகளும் உரை நூல்களும், பல்கலைக் கழகத்தாராலும், அரசியலாராலும் வெளியிடப் பட்டுள்ளன.

ை ை ை ை

தமிழ் நாட்டில் இக்காலத்துத் தமிழ்ச்சங்களுள் முன்னதோன்றுகிய மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையில், 1940, சூலை, 7உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியா ரவர்களது உருவப்படத்தை, செட்டி நாட்டரசர் வீரத்திரு. (Sir) அறிஞர் மு. அண்ணாமலைச் செட்டியாரவர்கள் திறந்து வைத்தார்கள். திரு. பண்டிதமணியவர்களுடைய கல்வி நலத்தையும் செட்டி நாட்டரசரவர்களுடைய கொடை நலத்தையும், கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர், தமிழவேள் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள், மகா வித்துவான் ரா. இராகவையங்கா ரவர்கள் முதலிய பல அறிஞர்கள் பாராட்டிப் பேசினார்கள். நீடு வாழ்க.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக விருந்து தமிழ்ப் பகுதியினைச் சீர்பெற நடாத்திய திரு. பண்டித மணி கதிரேசச் செட்டியாரவர்களைத் தமிழுலகம் நன்குணரும். தென் மொழி வட மொழிகளிற் சிறந்த புலமை பெற்றுத் திகழும் இவர்கள் தமிழுக்குச் செய்யுந் தொண்டுகள் அளவிடற் பாலவல்ல. செட்டி நாட்டிலுள்ள மேலைச் சிவபுரியில் பல்லாண்டாகத் தமிழ்த் தொண்டு செய்துவரும் சன்மார்க்க சபையென்னுந் தமிழ்க் கழகம், இவர்களது நல்லுளத் தோற்றமேயென்னின் அது மிகையாகாது. தமிழே தம்முயிர் எனக் கொண்ட இப்பெரியார் தமிழைப் பயின்ற புலவர்கட்கும் பயில விரும்பும் மாணவர்கட்கும் பேருதவி செய்யும் பெற்றியினர்; வடமொழி நன்னூல்களை மொழிபெயர்த்துத் தமிழர்க்கு வழங்கும் வள்ளல்; தமிழிலக்கண நூல்களை மாணவர்க்கு எளிய முறையில் எடுத்துணர்த்தும் திறனுடையார்; சங்க இலக்கியங்களிலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களிலும், திருவாசகம் முதலிய திருமுறைகளிலும், நவில்தொறும் நயங்கண்டுணர்த்தும் அறிவாற்றல்களிற் சிறந்து விளங்குந் திருவுடையார்.

இத்தகைய தமிழ்ப் பேரறிஞர்க்குச் செய்யுஞ் சிறப்பினை மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை மேற்கொண்டது குறித்துப் பெரிதும் மகிழ்கின்றோம்.

ஏ ஏ ஏ ஏ

திருப்பனந்தாள் மடத்தின் தலைவர் உயர்திரு. சாமிநாதத் தம்பிரான் சுவாமி அவர்கள், இதுபோது நடைபெற்றுவரும் பெரும் போரில் முனைந்து நிற்கும் ஆங்கில அரசியலாருக்கு உற்றுழி உதவ முன்வந்து, உளமுவந்து ஒரு இலக்கம் வெண்பொற் காசுகளை, மூன்று ஆண்டுகட்கு வட்டியில்லாமலும், பின்னர் வட்டியுடனும், கடனாகக் கொடுத்தது காலத்தினாற் செய்த பேருதவியாகும். அரசரைத் தாங்க முன்வந்த இப்பெரியார் தமிழை மறந்தார்களில்லை. மூன்றாண்டுகள் கழிந்த பின்னர் இம்முதற் பொருள் ஈனும் வட்டித் தொகையைத், தமிழ் வித்துவான்

தேர்வில் வெற்றியடைந்து, சிற்றூர்களில், கணக்கர்களாகவும், ஆசிரியர்களாகவும், சித்த வயித்தியத்தில் தேர்வுபெற்ற மருத்துவர்களாகவும் அலுவல் பார்த்து வருபவர்களில், தகுதியுடையோரைத் தேர்ந்து, ஒரு சிலர்க்கு அன்னவர் வாணாள் முற்றும் 35 வெண்பொற் காசு விழுக்காடு திங்கள் தோறும் தருவதற்கென இத் தொகையை முதற்பொருளாக வைத்திருக்கின்றனர்.

இத்தகைய அறவினை தமிழ்ப் புலவர்கட்கு ஆக்கம் விளைப்பதாகும்; சிற்றூர்களில் புலவர்கள் வதியவும், தமிழ் மருத்துவம் சிறந்து விளக்கமுறவும், தமிழ்க்கலைகள் மலியவும் தூண்டுதற்குரிய நல்லறமாகும். இதனால் பயன் கொள்ளும் புலவர்கள் ஐவர் அல்லது அறுவர் ஆகிய சிறு தொகையினராயிருந்தாலும், தமிழகம் நன்றியுடன் போற்றுதற்கான சீரிய அறச்செயலென மதிக்கின்றோம்.

# காட்சி யளவை

திரு. த. இராமநாதபிள்ளை, பி.ஏ. (இலண்டன்), சுன்னாகம், இலங்கை.

(முற்றொடர்ச்சி: துணர் 16, மலர் 3, பக்கம் 94.)

## 16. கணிதானுமானம்.

பெத்தநிலை மக்களது அநுபவம் குறைவுடையது. சுத்த உணர்வைப் பெறுதற்கு யாம் சுத்த உலகினராதல் வேண்டும். நினைவுலகத்துக் காரண காரியத் தொடர்புகள் முற்றும் முடிபானவை. ஒரு முக்கோணம் இரு சம கோடுகள் உடையதாயின், மூன்றும் கோடுடன் இவ்விரு கோடுகள் வரையும் கோணங்களும் சமமாகும். இவ்வுண்மை எண்ணல் முறையால் துணியப்பட்டதன்று. ஒப்புமுறையெனின் ஒரு புடை ஒக்கும். நினைவுலகப் பொருட்களின் பண்புகள் சுத்தமாக வரையறை செய்யப்பட்டவையாகையால் ஒப்பு மிகவும் வலியுடையதாகும். நினைவுலகப் பொருட்களை நாம் வரைவிலக்கணம் கூறி இப்பொருள் இன்னதெனக் கற்பிக்கிறோம். எழுத்துக் கணிதச் செய்கை யொன்றைத் தருதும். $(ப+ம)(ப-ம)=ப^2-ம^2$. பகரத்திற்கும் மகரத்திற்கும் பதிலாக எண்களைச் செய்கையாக்கினும் இச்சமீகரணம் உண்மையாகும்.

$$(5+3)(5-3) = 5^2-3^2$$
$$8\times 2 = 25-9=16.$$

இனி, ஒரு எண்ணின் வருக்கம் ஒன்று முதலிய ஒற்றை எண்களை அவ்வெண்முறை கூட்டிய தொகைக்குச் சமமாகும்.

$$6\times 6 = 1+3+5+7+9+11$$
$$5\times 5 = 1+3+5+7+9$$
$$4\times 4 = 1+3+5+7$$
$$3\times 3 = 1+3+5$$
$$2\times 2 = 1+3$$
$$1\times 1 = 1$$

$$11=(6+6-1)$$
$$7=(4+4-1)$$

$எ^2 = எ \times எ = 1 + 3 + 5 + \ldots + \ldots (எ + எ - 3) + (எ + எ - 1)$

$எ^2 = \frac{எ}{2} \{ (2 \times 1) + (எ - 1)2 \}$

$= \frac{எ}{2} (2 + 2 எ - 2)$

$= எ \times எ$

எண்கள் தொகை ஒருபோதும் விகற்பமடையா வாகையால் கணிதப் பிரமாணங்கள் யாண்டும் பிரமாணங்களாகவே இருக்கும். இயற்கைப் பிரமாணங்களேயும் இக்கணிதப் பிரமாணங்கள் போல் வலியுடையவை ஆக்க முயலவேண்டும். காரணகாரியங் களைத் தெளிவாக வரையறுத்தால், இயற்கைவிதியும் குற்ற மில்லாத பிரமாணமாகும்.

## 17. முன்னிகழ்ச்சி : பின்னிகழ்ச்சி.

ஐம்புலன்களில் ஒன்றாலும் பலவற்றாலும் அறியப்படுவன தோற்றங்கள் எனப்படும். மழை, வானவில், கடற்றிரை, மின்னல், முழக்கம், மாடு, மனிதன் என்பன தோற்றங்கள். இயற்கையாகத் தோன்றும் தோற்றங்களின் தொடர்பை ஆராய்தலே, இயற்கை யாராய்ச்சி யாகும். தோற்றங்களுள் தொடர்பில்லையெனச் சிந்தித்தல் இயல்பு. மாலையினின்று நழுவி விழுந்த கட்டுப்பூ ஒன்று விடயமாக அதை விடுபூவென எண்ணினால் மாலையென்னும் காட்சி தோற்றாதவாறு, ஒரு தனித்தோற்றம் நிகழ்ந்துழி அத்தோற்றம் ஒரு தோற்றத் தொடையலின் ஒரு சிறு உறுப்பென்பது புலப்படாது. பூக்கள் ஒன்று ஒன்றோடு கட்டப்பட்டு மாலையாதல் போலத் தோற்றங் களும் ஒன்று ஒன்றோடு இடைவிடாது தொடையலாகவே நிகழும். உலகம் என்பது ஒரு தோற்றத்தொடையல். உலகம் அலையலையாய் வருந் தோற்றங்களை யுடையது, என்பதை நன்கு கடைப்பிடிக்க. கடலில் எழும் அலையொன்று தனித்தோற்ற மன்று. ஒரு அலையென்பது பல அலைகளையுடைய ஒரு தோற்றமே. சித்தாகிய அறிபொருளுக்கு உலகு ஒரு தோற் றத்தொடையலாகும். ஒரு தோற்றத்தின் முன் நிகழ்வது முன்னிகழ்ச்சி எனப்படும். ஒரு முன்னிகழ்ச்சியின் பின் நிகழ்வது பின்னிகழ்ச்சி யெனப்படும். தொடர்பாக வரும் தோற்றங்களில் ஒரு தனித்தோற்றத்தை எடுத்து, அதன் முன்

னிகழ்ச்சி பின்னிகழ்ச்சிகளை ஆராயலாம். சிலர் முன்னிகழ்ச்சி பின்னிகழ்ச்சி என இருநிகழ்ச்சிகள் இல என்றும், அவ்விரண்டும் ஒரு தோற்றமே என்றும் மொழிகின்றனர். தோற்றங்களைத் தேருங்கால் அதன் முன்னிகழ்ச்சியை ஆராயாமல் அத்தோற் றத்தோடு உடன்நிகழும் உடனிகழ்ச்சியையே நாம் தேர்கிறோம். உடனிகழ்ச்சிகளை ஆராய்கிறோமெனினும் முன்னிகழ்ச்சி பின் னிகழ்ச்சியை ஆராய்கிறோமெனினும் ஈண்டு ஒக்கும். ஒரு தோற்றம் பிறிதோர் தோற்றத்தோடு தொடர்புடையதென்பது எல்லாருக்கும் ஒப்பமுடிந்தது. முன்னிகழ்ச்சியும் பின்னிகழ்ச் சியும், எத்தகைய தொடர்புடையவென்பது ஆராயற்பாலது. பறவை ஒன்று ஆகாயத்தில் தோன்றும்போது, ஆகாயமும் பறவையும், இருவேறு காட்சி ஒன்றாகத் தோன்றும் ஒரு சையோகமோ, அன்றி, நீக்கமின்றி நிற்கும் ஒரு சமவாயமோ என ஆசங்கை நிகழும்.

## 18. காரணசந்தர்ப்பம்.

ஒரு தோற்றத்தின்முன் யாண்டும் முன்னிகழ்வதே அதன் காரணமென **யேவேன்ஸ்** மொழிந்தனர். ஒரு தோற்றத்தின் முன்னிகழ்ச்சி ஒரு காலத்தில் ஒன்றாகவும் வேறோர் காலத்தில் வேறொன்றாகவும் இருக்குமாதலான் பல முன்னிகழ்ச்சிகள் உண்டாதல் கூடும். அவற்றுள் எது யாண்டும் நிகழும் முன்னிகழ்ச்சியென ஆராய்தல் அவசியம். எரியும் வீடு ஒரு தனித் தோற்றம். அத்தோற்றத்தின் முன்னிகழ்வன, சூரிய வெளிச்சம், காற்றுவீசுதல், தீ முதலியன. தீப்பற்ற முன் நிகழ்ந்தது சூரிய வெளிச்சமாகலின், சூரியனது ஒளியே வீடு எரிதற்குக் காரணமெனில் நகைவிளைக்கும். முன்னிகழ்ச்சி காரணமென்றதைக் களைந்து யாண்டும் முன்னிகழ்வதே காரண மென்பதை அனுவதிக்கிறோம். இது நிற்க, சிலர் காரண சந்தர்ப்பமே யாண்டும் முன்னிகழ்வதால் அதைக் காரணமென ஐயுறுகின்றனர். ஒரு தோற்றத்திற்குரிய சந்தர்ப்பமே காரண சந்தர்ப்பம். சந்தர்ப்பத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் எல்லாம் காரணமாகவும், அவற்றுள் ஒன்றே காரணமாகவும் இருத்தல் கூடும். துப்பாக்கி (தீப்படை) யாற் சுடும்போது, ஒரு தொனி

புண்டாகின்றது. துப்பாக்கியாற் சுடுவதே இத்தொனியின் காரணம். தொனியின் காரணசந்தர்ப்பம் துப்பாக்கியின் பொறி, மருந்து, குண்டு, குழல், வாயுமண்டலம், ஒலியின் தன்மாத்திரை, முதலியன. காரண சந்தர்ப்பமே காரணமெனின், இவ்வுலகமே எல்லாவற்றின் பரமமுதற் காரணமாகுமென்பர் (ultimate cause). தொனியின் முன் நிகழ்ச்சியாகிய பொறியைப் பொறித்தல் காரணமன்று. பொறியைப் பொறித்தல் காரணத்தின் தருணம் ஒழியக் காரணம் அன்று. வினைமுதலே காரணம் என்பதைத் தருக்கநூல் ஆராய்கின்றிலது. யாண்டும் முன்னிகழ்வது எதுவென்பதே ஆராய்ச்சி யாகலால், காரண சந்தர்ப்பத்துள் உள்ள ஒரு முன்னிகழ்ச்சியே காரணமாகும். அம்முன்னிகழ்ச்சியை ஆராய்தலே காட்சியளவையின் நோக்க மாதலான், காரணத்தின் வரைவிலக்கணத்தை வரையறை செய்தல் அவசியமென்பதை உணர்க.

## 19. காரண வாரய்ச்சி.

காரணத்தை மில் வரையறுத்தவாறு கூறுதும். முதலாம் கூற்று முன்னிகழ்ச்சியே காரணம். இம் முன்னிகழ்ச்சி, தனி நிகழ்ச்சியன்றிப் பல முன்னிகழ்ச்சிகளையுடைய காரண சந்தர்ப்பமாதல் கூடும். ஒருவன் உணவொன்றை அருந்தி இறந்தானாக, உயிர் நீக்கத்தின் முன்னிகழ்ச்சி இவ்வுணவை அருந்தல். உணவொடு கலந்த நஞ்சு, இறந்தோனின் தேக சௌக்கிய நிலை, பெரும்பொழுது நிலை, உண்ணப்பட்ட வேறுணவுகள், முதலியன காரணசந்தர்ப்பமாகும். ஒரு சாரார் காரணசந்தர்ப்பமே காரணமென்பர். முன்னிகழ்ச்சி காரணமெனின், அது எவ்வளவு காலத்துக்கு முன்னிகழ வேண்டுமென வினவலாம். அன்றியும், சில நிகழ்க்சிகள் உடனிகழ்ச்சிகளாகையால், முன்னிகழ்ச்சி யென ஒருநிகழ்ச்சி இலதாகும். ஒரு தோற்றம் இருவேறு நிகழ்ச்சிகளை உடையதன்று என்பது பொருந்தும்.

முன்னிகழ்ச்சி எப்பொழுதும் உடனிகழும் தோற்றமாகும் என்பது பொருந்துமென மேலோன் (Melone) மொழிகின்றனர். ஒரு தொற்று நோயால் பீடிக்கப்படு முன்னரே பலநாளுக்கு

முன் அந்த நோயின் அணுக்கள் (germs) ஒருவன் உடம்பில் நுழைந்து இரத்தத்தோடு கலந்து சரீரத்திற்குக் கெடுதியை விளைக்கும். இந்த நோயால் ஒருவன் மரிக்கும்போது நோயணுக்கள் காரணமென்போம். ஆனல், முன்னிகழ்ச்சி என்னை எனின் இருதயம் இயங்காது நிற்றலே. எந்நோயாலும் வேறெவ்விதமாகவேனும் ஒருவன் இறக்கும்போதும் இருதயம் இயங்காமையே முன்னிகழ்ச்சி. ஒரு தோற்றத்தை முன்னிகழ்ச்சி பின்னிகழ்ச்சியென இரு கூருகப் பிரித்தல் குற்றமாகும். இக்கூற்றுப் பொருந்தும்; என்னை ? முன்னிகழ்ச்சியும் பின்னிகழ்ச்சியும் ஒன்ருேடொன்று கலந்து பின்னுப்பட்டு உடனிகழும் ஒரு தோற்றமாகவே யிருக்கும். உலகம் தோன்றி நின்றழியும் தோற்றங்களானுயது. இத்தோற்றங்களோ இடைவிடாது நிகழ்வன. நீர்த்தரங்கம் போல அலையின்பின் அலையாய்த் தோற்றங்கள் நிகழ்வன. ஒரு தோற்றத்தைப் பிரித்தெடுத்துத் தனித் தோற்றமாக ஆராயவியலாது. பிராணவாயுவும் (Oxygen) எரிவாயுவும் (Hydrogen) புணர்ந்தெரியும்போது நீர்தோன்றும். இத்தோற்றத்தை முன்னிகழ்ச்சி பின்னிகழ்ச்சியாகப் பிரிக்க வியலாது. ஒரு வாயு மற்ற வாயுவை, நீராக்குகின்றதன்று. தீப்பற்றுதல் மின்பற்றுதல் என்னும் காரணங்களே இவ்வாயுக்களை நீராக்குகின்றன.

## 20. பல வேதுக் கோள்கை.

முன்னிகழ்ச்சியைக் காரணமென்பதும் பின்னிகழ்ச்சியைக் காரியமென்பதும் மரபு. தோற்றங்களெல்லாம் பெரும்பாலும் முன்னிகழ்ச்சி பின்னிகழ்ச்சியெனப் பிரிக்கப்படும் என்னும் கொள்கையை மேற்கொள்வோம். ஒரு தோற்றத்திற்குப் பல முன்னிகழ்ச்சிகள் உண்டாதலின், ஒரு காரியத்திற்குப் பல காரணங்களுண்டென மில் ஐயுற்றனர். மில்லினது இரண்டாங் கூற்றுப் பொருத்தமானதே. பிகரத்திற்குக் காரணம் ப், அ, இ என்ருற் போல, ஒரு காரியத்திற்குப் பல காரணமுண்டு. ஒரு நோயைப் பலவேறு மருந்துகளால் நீக்கலாமென வைத்திய நூலோர் உரைக்கின்றனர். எலிகளைத் தொலைத்தற்கு எலிப்பொறிகளும், நஞ்சும், பூனைகளும் எனப் பல

ஏதுக்களுண்டு. ஒருவர் இவற்றுளொன்றாலும் பலவற்றாலும் எலி களைத் தொலைப்பர். இங்ஙனம் பல வேதுக்களுள்ள தோற்றங் களுக்கு, ஒரு ஏதுவை மாத்திரம் எடுத்துக்காட்டி இதுவே காரணமெனல் ஆராய்ச்சி முறையாகாது. பல காரணங்களுண் டாயின் பலவற்றையும் காரணமெனக் கருதலின் குற்றமில்லை. பல வேதுக்கள் உண்மையென்னும் கூற்று, ஒரேயொரு முன் னிகழ்ச்சிதான் உண்டென்னும் கூற்றோடு முரணுகும். மில்லின் முதலாங்கூற்று இரண்டாவதோடு முரணுகிறது.

## 21. நீக்கமின்றி நிற்கும் முன்னிகழ்ச்சி.

இனி மில் கூறும் நீக்கமின்றி நிற்கும் இன்றியமையா முன் னிகழ்ச்சி ஒன்றுண்டென்பது பலவேதுக் கொள்கையோடு நனி முரணும். பெரும்பாலும் முன்னிகழும் நிகழ்ச்சியைக் காரணம் என மயங்குதல் குற்றம். ஒரு முன்னிகழ்ச்சியும் பின்னிகழ்ச்சி யும் யாண்டும் முன்பின்னுக நிகழ்ந்தாலும், காரண காரியத் தொடர்புடையன என்பதற்கு ஆதாரம் வேண்டும். நீக்க மின்றி நிற்கும் நிகழ்ச்சிகளுக்கே காரணகாரியத் தொடர்பைக் கூறலாம். ஒரு முன்னிகழ்ச்சியும் ஒரு பின்னிகழ்ச்சியும் நீக்க மின்றி நிற்பின், ஒன்று தோன்றுமல் மற்றது ஒரு போதும் தோன்றுது. இத்தகைய நீக்கமின்றி நிற்கும் தோற்றங்கள் உண்டென்பது தத்துவ நூலோரின் துணிபு. இவ்வாறு முன் னிகழ்ச்சியும் பின்னிகழ்ச்சியும் நீக்கமின்றி நிற்பனவாயின், ஒரு காரியத்திற்கு ஒரு காரணம் மாத்திரம் உண்டு என்பது வெளிப் படையாகும். பலவேதுக் கொள்கை போலியென்பதும் பெறப் படும். அசைவினது காரணங்கள் மோதுதல், சூடு, மின்சாரம், கவர்ச்சி முதலியன. பல காரணங்களையுடைய ஒரு தோற்றத் தை நுட்பமாக ஆராய்ந்தால் அக்காரணங்களுள் ஒரு காரணமே உண்மையான காரணமென அறியலாம். அசைவுக்குக் காரணம் முந்தியதோரசைவே. சூடு, மின்சாரம், கவர்ச்சி முதலிய வற்றுள்ளும் ஒரு அசைவு உண்டு.

## 22. காரணத்தின் வரைவிலக்கணம்.

மெலோன் (Melone) மில்லின் கூற்றுக்களைத் தொகுத்துக் காட்டி அவற்றுள் காரணமென்பது நீக்கமின்றி நிற்கும் முன்

னிகழ்ச்சி என்னுங் கூற்றே பொருத்தமான தெனத் தலைப் பட்டார்.

1. காரணமென்பது முன்னிகழ்ச்சி.

2. காரணமென்பது காரண சந்தர்ப்பம்.

3. காரணமென்பது காரண சந்தர்ப்பமும் அதன் முன் னிகழ்வன வெல்லாமும்.

4. காரண சந்தர்ப்பத்தின்கண் உடனிகழும் முன் னிகழ்ச்சியே காரணம்.

5. காரணமென்பது நீக்கமின்றி நிற்கும் முன்னிகழ்ச்சி.

இவற்றுள் நான்காவதும் ஐந்தாவதும் போற்றப்படும். முன் னிகழ்ச்சி ஒன்று யாண்டும் முன்னிகழ்ச்சி யாயின், அதே நீக்க மின்றி நிற்கும் முன்னிகழ்ச்சி எனத் துணியப்படும். தருக்க வாசிரியர் பலர் காரணத்தின் இலக்கணத்தைப் பின்வருமாறு வரைகின்றனர்: ஒரு தோற்றம் நிகழ வேறோர் தோற்றம் நிகழ்ந்தும், நிகழாமலிருப்ப நிகழாமலு மிருப்பின், முந்திய தோற்றம் பிந்தியதின் காரணமெனப்படும். எகரம் நிகழ்ந்துழி விகரம் நிகழ்ந்தும், நிகழாதுநிற்ப நிகழாது நிற்குமாயின், எகரம் விகரத்தின் காரணமெனப்படும். காரணமும் காரியமும் முன் பின் நிகழ்வன என்புழி, அவை நீடித்த காலமும் சொற்ப கால மும் முன்பின் நிகழ்பவையாக இருக்கலாம். மேலும் காரணமும் காரியமும் பெரும்பாலும் உடனிகழ்வன. இவ்வுடனிகழ்ச்சி களைப் பற்றியே இயற்கை யாராய்ச்சிகள் மொழிகின்றன.

(தொடரும்.)

# இறைவன் தரும் இனிமை

வித்துவான் க. வெள்ளைவாரணன், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

கனியினுங் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே.

இத்திருப்பாடல் திருநாவுக்கரசர் அருளிய திருக்குறுந் தொகைப் பாடலு ளொன்றாம். இதன் பொருள் நுட்பத்தினைக் கருதுவதே இச்சிற்றுரையின் நோக்கமாம்.

உயிர்களின் அறிவுக்குப் புலனுகாமல் உயிர்களையும் அவை நுகர்தற்கேற்ற உலகினையும் உள்ளிருந்து இயக்கி நிற்கும் ஒரு வகைப் பேராற்றலையே மக்கள் தெய்வமெனக் கருதி வழிபடுகின்றனர். இவ்வாறு வழிபடப்பெறும் முழுமுதற் பொருளுக் குரியவாகத் தமிழில் கடவுள், இறைவன் என்ற சொற்கள் பண்டுதொட்டு வழங்கி வருகின்றன. எல்லாப் பொருள்களின் அகத்தும் இறுத்தல் (நிலைத்துத் தங்குதல்) கருதி இறைவன் என்ற பெயரும், எப்பொருளையும் உள்நின்று கடவுதல் (செலுத்துதல்) குறித்துக் கடவுள் என்ற பெயரும் முழுமுதற் பொருளுக்குரிய காரணப் பெயர்களாகத் தமிழ் மொழியில் அமைந்து வழங்கும் முறை கருத்தி விருத்தற்பாலதாம். உலகத்துக் கொள்கை வகையான் மாறுபட்டுறழும் மக்களெல்லோரும் இவ்விரு சொற்களின் உட்பொருளைக் கூர்ந்து நோக்குவாராயின், தமிழர் உணர்ந்துரைத்த கடவுளின் இயல்பினை நன்கறிவர். இவ்வியல்பு இவண் எடுத்துக்கொண்ட திருப்பாடலி னினிது விளக்கப்பெறுகின்றது.

படிப்போருள்ளத்தைப் பண்படுத்தும் பெற்றிவாய்ந்ததே பாட்டெனப்படும். அதுதான் செவ்விய சொற்களால் இன்னோசைகொண்டு உயிர்களின் உள்ளத்தை உருக்கிநிற்றலும், நவிலுந்தோறும் நுண் பொருள் தந்து கற்றுருள்ளத்தைக்

காமுறச் செய்தலும் ஆகிய இயல்பினதாம். இத்தேவாரப் பாடலும் இவ்விருவகைப் பெற்றியும் பெற்று மிளிர்தல் அறிதற் குரித்தாம்.

**இதன்பொருள் :—** கனியினும்—சுவைமிகுந்த பழத்தைக் காட்டிலும், கட்டிபட்ட கரும்பினும்—கருப்பஞ் சாறு அடப் பெற்றுக் கட்டியான வெல்லக் கட்டியைக்காட்டிலும், பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்—குளிர்ந்த மலர் நிறைந்த கூந்தலை யுடைய பாவையினையொத்த கற்புடைமகளிரைக் காட்டிலும், தனிமுடி கவித்தாளும் அரசினும்—ஒப்பற்ற முடியணிந்து உல கினை யாட்சிசெயும் பேரரசனைக் காட்டிலும், இடைமருதன்—திருவிடைமருதிடங்கொண்ட சிவபெருமான், தன்னடைந் தார்க்கு—அன்பால் தன்னையடைந்த அடியார்கட்கு, இனியன்—இனிமையைத் தந்தருள்வான் என்பதாம்.

இடைமருதிடங்கொண்ட பெருமான் தன்னை யடைந் தார்க்குப் பழத்தினும், வெல்லக் கட்டியினும், பெண்கள் நல்லா ரினும், உலகப் பேரரசினும் மிகச்சிறந்த பேரின்பத்தினைத் தந் தருள்வா னென்பதே இவ்வுரையின் பொழிப்பாகும். இவ் வுரைக்கு இன் உருபெல்லாம் ஒப்புமை கூறாது மாறுபடக் கூறப் படும் உறழ்பொருளில் வந்தனவாகக் கொள்ளல்வேண்டும்.

இரண்டு அஃறிணைப் பொருளினையும் இரண்டு உயர்திணைப் பொருளினையுஞ் சுட்டி, அவற்றின் மேம்பட்ட இனிமையினை இறைவன் அடியார்க் கருள்வன் என இத்திருப்பாடல் அறிவிக் கின்றது. இதன்கண் கனி, கட்டிபட்ட கரும்பு, பாவைநல்லார், அரசன் என முறைப்படுத்தியதன் கருத்து ஒருவாறு ஆராயதற் குரியதே. இளைஞர்முதல் முதியவர்வரை யாவரும் வெறுதுண் ணுங்கனி மிகவும் இனிமையுடைத்தாகலின், அதனை முன்வைத் தார். என்றாலும், அவ்வினிய பழத்தின்கண் விதையும் தோலு முதலிய ஒதுக்கப்படு பொருளு முண்மையின் அவ்வாறொதுக்கப் படாது முழுது முண்ணத்தக்க சுவை மிக்க வெல்லக் கட்டியை அதனினும் மேலாகப் பின்னர் வைத்தார். வெல்லக்கட்டி ஒதுக் கப்படாத நற்சுவை யுடைத்தாயினும் நாவென்ற வொரு பொறிக்கே சுவை தருவதாகலின், அவ்வா றன்றி ஐம்பொறி

நுகர்ச்சியும் தரும் அன்பறிவுப் பண்புடைய கற்புடை நல்லாரை அதனின் மேலாக வெடுத்துரைத்தார். நல்லார் ஐம்பொறி யின்ப மளிப்போராயினும் அவர்தம் காவலும், உலகியலொழுக் கங்களும், அரசனையின்றி நடவாவாகலானும், அவன்றான் 'மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்' எனப்பெற்று அனைத்துயிர்க்கும் அருளுடையனாய் உயிர்காவற்றொழில் பூண்ட பெற்றியினனாக லானும், ஐம்புலவின்பம் ஆரத்தரும் கற்புடைப் பெண்களினும் நல்லான் மன்னன் எனக்கொண்டு மகளிரின்பத்தினும் மேலாக மன்னன் தரும் இனிமையினைச் சிறப்பித்துரைத்தருளினார்.

இப்பாடலிற் சொல்லியபடி கனி, வெல்லக்கட்டி, பெண்கள், அரசன் ஆய இப்பொருள்களினும் இறைவன் சிறந்தவனென்ப தனைச் சொல்லுதல் வேண்டுமோ? களாப்பழத்தினும் பலாப் பழம் பெருமையும் சுவையும் உடையது என்பார் உரைபோ லன்றோ இவ்வுரை காணப்படுகின்றது என்று சிலர் வினவுதல் கூடும். ஒவ்வொரு கூற்றும், கேட்போர் உள்ளநிலைக் கேற்பவே பிறராற் கூறப்படுகின்றதென அறிஞர் புகல்வர். பலாப் பழத்தைக்கண்டு உண்டறியாதான் ஒருவன் அதன்பெருமையுஞ் சுவையும் அறிய விழைந்தானாயின் அதனை அவனுக்குணர்த்தப் போந்த மற்றொருவன் அவன் நுகர்ந்து மகிழ்ந்த களாக்கனியைச் சுட்டி, அதைவிட வடிவத்தானும் சுவையானும் பன்னூறு மடங்கு பலாப்பழம் பெரியதெனப் புகல முற்படுவன். அதுபோல, கடவுளைக்கண்டு அவர்தரும் இன்பப்பெருக்கினை நுகர்ந்தறியாத நம்மனோர்க்கு அதனையுணர்த்தப் போந்த நாவுக்கரசடிகளார், உலகியலில் இன்பமுடையதெனக் கொண்டு நாம் நுகரும் பொருள்களைக் காட்டி, அவற்றான்வரும் இனிமையினும் இடை மருதீசன் தன்னடைந்தார்க்கருளும் இனிமை மிகவுயர்ந்த தென்று கூறுதலில் இழுக்கொன்றுமில்லை யென்க.

இனி, நவிலுந் தோறும் சுவைமிகத்தரும் இப்பாடலுக்கு மேற்கூறிய வினாவெழுதற் கிடனின்றி ஒருபொருள் கூறுவோம். பொருந்துவதாயின் அறிஞர் கொள்க.

அஃதாவது, இப்பாடலில் வரும் இன் எல்லாவற்றையும் ஒப்புமை கூறாது மாறுபடக் கூறும் உறழ்பொருளில் வந்தன

வாகக் கொள்ளாது, இன் சாரியையெனக்கொண்டு ('செலவினும் வரவினும்'—தொல். சொல்.) என்பனபோல ஏழாமுருபாய கண்ணுருபு தொக்கதாகக் கொண்டு அதனை விரித்துரைப்பாம்.

பொருள்:— கனியினும்—பழத்தின் கண்ணும், கட்டிபட்ட கரும்பினும்—வெல்லக்கட்டியின் கண்ணும், பனிமலர்க் குழற் பாவைநல்லாரினும்—குளிர்ச்சியான மலரார்ந்த கூந்தலினையுடை பாவையினை யொத்த மகளிர்கண்ணும், தனிமுடி கவித்தாளு மரசினும்—ஒப்பற்ற தனிமுடிதாங்கிப் பிறர்க்கில்லாப் பெருஞ் சிறப்போடு உலகத்தையாளும் மன்னன்கண்ணும், (நின்று) தன் னடைந்தார்க்கு—தன்னைப்பற்றுகக் கொண்ட அடியார்களாகிய உயிர்களுக்கு, இனியன்—இனிமையைத் தந்தருள்கின்றவன், இடைமருதனே—திருவிடைமருதி லெழுந்தருளியுள்ள எம் சிவ பெருமானே, என்பதாம்.

உலகத்து நிற்பனவும், நடப்பனவுமாம் உயிர்க்கூட்டங் களில் எல்லாவற்றின்கண்ணும் அன்பு, அறிவு, அருள், கொடை, இனிமை யாகிய சிறப்புடைப் பண்புகள் அருகிக் காணப்படு கின்றன. உலகமோ தனக்கென உயிர்ப் பண்பினைப் பெறாத அறிவில் பொருளாகும். ஆதலால், மேற்சொல்லிய உயர்பண்புக ளெல்லாம் உலகத்தைச்சார்ந்தனவல்லவென்பது தானே பெறப் படும். ஆனால் எல்லாவுயிர்களிடத்தும் உயர்பண்புகள் என்றும் பெருகிக் காணப்படுவதில்லை. ஆயினும், இப்பாட்டிற் கூறியபடி கனி, கட்டிபட்ட கரும்பு, பெண்கள், தனிமுடிமன்னன் ஆகிய இப்பொருள்களில் ஒன்றினொன்று மேலாக இனிமைப்பண்பு வரவர வளர்ந்து காணப்பெறுகிறது. இவ்வாறு எப்பொருளி னும் காணப்படுவதாய் அருகியும் பெருகியும் மிளிரும் இவ்வினி மைக்கு நிலைக்களன் யாது என வாராய்ந்து அதனை நாவரசாய பெருந்தகையார் வெளியிடுகின்றனர். தாம் கண்டறிந்த அவ்வினி மையின் நிலைக்களத்தை நமக்கு எடுத்துணர்த்தும் பாடலே இவ்வினிய திருப்பாட்டாகும்.

சுவை முதிர்ந்த நல்ல கனியின் வழியாகவும், ஒதுக்கப்படு பொருளின்றித் தீஞ்சுவையெனத் திரண்ட வெல்லக் கட்டியின் வழியாகவும், ஐம்புல வின்பமும் ஆரத்தரும் நல்லார் வழியாகவும் மன்னுயிர் அனைத்தும் தன்னுயிரெனக் கொண்டு குறிக்கொண்டு காக்கும் மன்னன் வழியாகவும், இறைவனடியார்களாகிய நாம் அடையவரு மின்ப மனைத்தும் இடைமருதீசனாகிய இனிமைக் கருவூலத்தினின்றும் சுரந்து பொழிவனவேயாம் என்றவுண்மை யினை அரசர் இத்தீந்தமிழ்ப் பாடலால் நம்மனோர்க்குச்செவியறி வுறுத்திய திறம் என்றும் நினைத் தின்புறற்பாலதாம்.

# சிலம்பின் முச்சுவை.

**வித்துவான் சே. வேங்கடராமச் செட்டியார்,**
*அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சி மாணவன்.*

உலகின்கண் உளவாய உயிர்கள்யாவும்தத்தமக்கு வேண்டிய சுவையினை விரும்பியும் நுகர்ந்தும் வருகின்றனவென்பதும், அச்சுவைதான் பொறி கருவியாக நுகர்ந்து இன்புறத்தக்கதாகும் என்பதும், பொறி கருவியாக நுகரும் இச்சுவையான் வரும் இன்பத்தினும் அறிவு கருவியாக நுகரும் காவியச் சுவையான் வரும் இன்பம் தலைசிறந்ததென்பதும் பெரியார் துணிபு. அறிவு மதுகையற்றூர்க்குக் காவியச்சுவையான் வரும் இன்பம் நுகர்தல் கூடாமையின், அன்னூர் தாம்படைத்த பொருளினளவே பொறி கருவியாக நுகரும் இன்பத்திலிருமாந்து, அப்பொருளற்றக்கால் அதன் காரியமாகிய இன்பத்தையுமிழந்து துன்புறுவர். அறிவு கருவியாக நுகரும் காவியச் சுவையான் வருமின்பம் என்றுங் கெடுமியல்பின்றி நின்று நிலவும். பொருளான் படைக்குமின்பம் வளர வளர அதற்கு மூலமாகிய பொருள் தேயு மென்பதும், அறிவான் படைக்குமின்பம் வளரவளர அதற்குக் காரணமாகிய அறிவு வளருமென்பதும் பலருமறிந்ததாகும். அங்ஙனம் அறிவானுகரப்படும் சுவைகளமைந்த காவியங்கள் பலவாம். அக்காவியங்கள் இயற்றும் புலவர் பெருமக்கள், யாவரும் விழையும் இயல்பினவாய சுவைகளை யேற்றவிடங்களில் அமைத்துச் செல்வதில் பெருமுயற்சியுடையராயிருப்பர் என்பது பெரியோர் துணிபு. அத்தகைய புலவர் பெருமக்களால் இயற்றப்பட்ட காவியங்கள் பலவற்றுள்ளும் ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டது, வளங்கெழு புலமை **இளங்கோவடிகள்** இயற்றியருளிய உலப்பிலாப் புகழுடைச் **சிலப்பதிகாரம்** என்னும் அரிய காவியமாகும்.

இச்சிலப்பதிகாரத்தின்கண் மூன்று பிரிவு இருத்தற்குவேறு காரணங்கள் இருப்பினும், சுவைகள் காரணமாக ஆசிரியர் மூன்று

காண்டமாகப் பிரித்தார் என்று கூறுதல் சிறப்புடைத்தெனத் தோன்றுகின்றது. அங்ஙனம் பிரித்தவாற்றை யினியாராய்வாம்.

சுவை யென்பதும் மெய்ப்பாடு என்பதும் ஒரு பொருட் கிளவிகள். இம்மெய்ப்பாடு, நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, நடுவுநிலை என ஒன்பது வகைப்படும். இவற்றுள், தலைசிறந்தனவாய்க் காவியங் களுக்கு இன்றியமையாது வேண்டப் படுவதாய சுவைகள், உவகை, அழுகை, பெருமிதம் என்ற மூன்றுமேயாம். இவற்றை வடநூலார் சிருங்கார ரசம், சோக ரசம், வீர ரசம் எனக்கூறுவர். இம்மூன்று சுவைகளையே **இளங்கோவடிகள்** தாமியற்றிய சிலம்பின்கண் முறையே யமைத்துள்ளார். அவற்றையாண்டு அமைத்துள்ளார் என்பதை யினிக்காண்பாம்.

வடநூலார் சிருங்கார ரசம் என்று கூறும் இன்பச் சுவை எல்லா மக்களும் விரும்பியேற்றுக்கொள்ளு மியல்பினது. இதனை வடநூற் புலவனாகிய போசராசனும், 'சுவைபலவென்று கூறு வார் கூறுக; யாங்கூறுவது இன்பச் சுவையே'. யென்று கூறினன் என்பர். இத்தகைய பெருமை வாய்ந்த இன்பச் சுவையினைத் தன்னுளடக்கியது உவகைச் சுவை. என்னை? புணர்ச்சி காரண மாகப் பிறக்கும் இன்பத்தோடு புலன், செல்வம், விளையாட்டு என்ற மூன்றினால் வரும் உவகையையுங் கூட்டித் **தோல்காப்பியர்,**

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்லல் நீத்த வுவகை நான்கே."

என இந்நான்கும் நிலைக்களனாக உவகைச் சுவை பிறக்கும் என்று ராகலின் என்பது. இந்நான்கும் நிலைக்களனாகப் பிறந்த உவகைச் சுவையினை வளங்கெழு புலமை **இளங்கோவடிகள்** சிலப்பதிகாரத்தின் முதற் பகுதியாய்ப் புகார் காண்டத்து அழகுற அமைத்துள்ளார்.

மனையறம்படுத்த காதையில், கோவலனையும் கண்ணகி யையும் கூறுகின்றுழி,

"உரைசால் சிறப்பி னரசு விழைதிருவிற்
பாதர் மலிந்த பயங்கெழு மாநகர்

முழங்கு கடன்ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
யரும்பொரு டரூஉம் விருந்திற் றேஎம்
ஒருங்கு தொக்கன்ன வுடைப்பெரும் பண்டம்
கலத்தினும் காலினும் தருவன ரீட்டக்
குலத்திற் குன்ரு கொழுங்குடிச் செல்வர்
அத்தகு திருவி னருந்தவ முடித்தோர்
உத்தர குருவினே டொப்பத் தோன்றிய
கயமலர்க் கண்ணியும் காதற் கொழுநனும்"

எனவருமடிகளான் செல்வம் நிலைக்களனுகப் பிறந்த உவகைச் சுவையை யமைத்துள்ளார். என்னை? புகார் நகரம், அலை கடல் சூழ்ந்த நிலவுலகம் முழுதும் வரினும் வழங்க வழங்கக் கெடாத வளத்தை யுடைய தாகலின், அவ்வறத்தானுய பொருளைக் கொண்டு தலைப்பட்ட அறத்தை யியற்றினோர் எய்தியின்புறும் உத்தர குருவோ டொக்கும்படி குலத்தில் குன்ருத செல்வர்க்குத் தோன்றிய கண்ணகியும் கோவலனும் எனச் செல்வச் சிறப்பைக் கூறுதலான் என்பது.

இனி, புலன் (அறிவு) நிலைக்களனுகப் பிறந்த உவகைச் சுவையை, மாதவி தன்னறிவின் றிறத்தால் இசைக் கலையினும் நாடகக் கலையினும் தன்னை யொப்பாரு மிக்காரு மில்லையாகக் கற்றுச் சோழன் முன்னிலையில் நடித்துக்காட்டிய அரங்கேற்று காதையில் அமைத்து அழகுபடுத்தி யுள்ளார், என்பதை,

"பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்துக்
காட்டின ளாதலின் காவல் வேந்தன்
இலைப் பூங்கோதை யியல்பினின் வழாமைத்
தலைக்கோ லெய்தித் தலையரங் கேறி
விதிமுறைக் கொள்கையி னயிரத் தெண்கழஞ்சு
ஒரு முறையாகப் பெற்றனள்."

எனவரு மடிகளா னுணரலாம். இவ்வடிகளில் மாதவி ஆடலை நன்னூல் கடைப்பிடித்துக் காட்டி அரசனுல் ஆயிரத்தெண்

கழஞ்சு பரிசில் பெற்ருள் என்று கூறியது காண்க. அறிவின் திறத்தைக் காட்டி அரசனிடத்துப் பரிசில் பெறுவதினும் அறிவு நிலைக்களனுகப் பிறந்த உவகைக்சுவை யாண்டுளது?

இனி, மூன்ருவதாகிய புணர்ச்சி நிலைக்களனுகப் பிறநத உவகைச் சுவையைக், கோவலன் கண்ணகியை மணந்தபின்னா, மலர்ப்பாயலின்கண் திங்களுங் கதிரும் திகழ்ந்தொருங் கிருந்த தன்மைபோல இருந்து கண்ணகியின் தடம்பெருந்தோளின் கண் காமன் கரும்பும் காமவல்லிக்கொடியும் எழுதித் தன் னுடையதாரும் அவளுடைய மாலையும் மயங்குமாறு புணர்ந்து இன்புற்ருன் என்ற கருத்தமைந்த,

"சுரும்புணக் கிடந்த நறும்பூஞ் சேக்கைக்
கரும்பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி
முதிர்கடன் ஞால முழுவதும் விளக்கும்
கதிரொருங் கிருந்த காட்சி போல
வண்டுவாய் திறப்ப நெடுநிலா விரிந்த
வெண்டோட்டு மல்லிகை விரியல் மாலையொடு
கழுநீர்ப் பிணையன் முழுநெறி பிறழத்
தாரு மாலையும் மயங்கிக் கையற்றுத்
தீராக் காதலிற் றிருமுக நோக்கிக்
கோவலன் கூறும் ஓர் குறியாக் கட்டுரை."

எனவரும் மனையறம்படுத்தகாதை யடிகளி லமைத்துள்ளார். கற்றுத்துறை போய கோவலன் கற்பிற்சிறந்த கண்ணகியொடு புணர்ந்தின்புற்ற இதனினும் சிறந்த புணர்ச்சியுவகை யுளதோ? கோவலன் மாதவியைப் புணர்ந்தின்புற்றது மிச்சுவையே யாம். கண்ணகியோடு கோவலன் புணர்ந்து இன்புற்ற தன்மையினை,

"தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவர்
காமர் மனைவியெனக் கைகலந்து—நாமந்
தொலையாத வின்பமெலாந் துன்னினுர் மண்மேல்
நிலையாமை கண்டவர்போ னின்று."

என மீண்டுங் கூறினுர்.

இனி, நான்காவதாகிய விளையாட்டு நிலைக்களனுகப் பிறந்த உவகைச் சுவையினைக் காண்பாம்.

" விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன்
தண்பதங் கொள்ளுந் தலைநாட் போல
வேறுவேறு கோலத்து வேறுவேறு கம்பலை
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றிக்
கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்
றிடங்கெட வீண்டிய நால்வகை வருணத்
தடங்காக் கம்பலை யுடங்கியைந் தொலிப்ப"

என இந்திரவிழவின் இறுதியில் ஊரவரும் கோவலனும் மாதவியும் கடலாடிய சிறப்பை விரித்துக்கூறுகின்றார், கடலாடு காதையில். விளையாட்டுகள் பலவிருப்பினும் வேனிற்காலத்து இணைபிரியாத் துணையோடிருந்து கடலாடுவதினும் சிறந்த விளையாட்டு இல்லையன்றே? இவ்விடத்துவிளையாட்டு நிலைக்களனாகப்பிறந்த உவகைச் சுவையினை விரித்துக் கூறுகின்றார். இங்ஙனம் இந்நான்கு பிரிவினதாய உவகைச் சுவையினைப் புகார் காண்டத்து அமைத்து அழகுபடுத்தினர் அடிகள்.

இனி, உவகையினிறுதி யழுகையா மாகலின், இவ்வழுகையை இரண்டாவது காண்டமாய மதுரைக்காண்டத்து அமைத்துள்ளார். அழுகைச் சுவையும்,

" இளிவே யிழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை யழுகை நான்கே."

எனும் ஒல்காப் பெரும்புகழ்த் தோல்காப்பியர் மொழிப்படி நால்வகைத்தாம். இந்நான்கினும் முதற்கண்ணதாய இளிவு நிலைக்களனாகப் பிறந்த அழுகைச் சுவையை யாண்டமைத்துள்ளார் என்பதை யாய்வாம்.

(தொடரும்.)

# கலிங்கப் போரும், காலிங்க வீரரும்.

திரு. ஈ. ஆர். நாசிம்ம ஐயங்கார், பி.ஏ., பி.எல்., வழக்கறிஞர், சேலம்.

(முற்றொடர்ச்சி: துணர் 16, மலர் 3, பக்கம் 101.)

இனித், திருவரங்கன் என்பவன் கருணாகரனுவன் என்பதனை அறிந்தேமாகலின், இவன் சாசனம் குலோத்துங்கன் 33-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்டிருப்பதினுன் அறியப்படும் செய்தி நோக்குவாம். கருணாகரன் ஒட்டிர சந்திகளில் தன்னிறைவன் சயத்தம்பத்தை நாட்டினுன் என்பது இடர்க்கரம்பைச் சாசனத் திற்கண்ட செய்தி யாகும். இவன் ஆலவேலி, ஓலராப்பாக்கம், குத்தவாதி, பஞ்சவடி முதலிய ஊர்களிலும் பல பணிகளைச் செய்துள்ளானென்று அச்சாசனங் கூறுகின்றது. பஞ்சவடி என்பது கோதாவிரிக் கரையிலுள்ளதோர் ஊராகும். இதனுன் கருணாகரன் சளுக்கரையும் மற்றப்பகைவரையும் அடக்குவதற்கு வடதேயத்தில் கலிங்கப் போருக்குப் பின்னரும் பல்லாண்டுகள் தங்கியிருந்தான் என்பது பெறப்படும்.

கலிங்கப் போருக்குச் சென்றிருந்த கோதண்டராமன் என்னுமொரு படைத்தலைவன் சாசனம் வருமாறு:

“ கூர்வேல் கோதண்ட ராமன் குலோத்துங்கன்
பேராற் பணித்தமைக்கும் பிச்சையம்மன் —சோமான்
வங்கத்தே துங்க வடகலிங்கங் கொண்டமைக்குஞ்
சங்கத் தருங்கடலே சான்று.”

இப்படைத்தலைவன் கலிங்கப் போரின் பின்னர் தனக்குரிய சேர நாட்டகத் தெய்தி குலேத்துங்கன் பெயரால் ஓர் கோயில் சமைத்தது கூறப்படுகின்றது.

“நின்றுடுவான்” என்னும் ஓர் படைத்தலைவன் சாசனம் இடர்க்கரம்பையிற் கிடைக்கின்றது.

" இம்பர் திகழவிளக் கிட்டா னிடர்க்கரம்பைச்
செம்பொனணி வீமீச் சரந்தன்னி—லும்பர்தொழ
விண்ணுய்ய நின்றாடு வானுக்கு வேலைசூழ்
மண்ணுய்ய நின்றாடு வான்."

இப் பாட்டில் வரும் " நின்றாடுவான் " என்பது கூத்தன் என்பதன் பரியாயமாகும். இப் பாட்டில் தேவருய்யக் கூத்தாடும் இடர்க்கரம்பை ஈசனுக்கு மண்ணுலகத்தார் வாழ்வதைக் கருதி பல செயல் புரியும் கூத்தன் என்னும் பெயருடையவன் ஓர் விளக்கிட்ட செய்தி கூறப்படுகின்றது. ஓர் பல்லவ குலத்தான், பொன்னம்பலக் கூத்தன், மணவிற் கூத்தன், சபா நர்த்தகன், அருளாளன், காலிங்கர் கோன் எனப் பலபடச் சாசனங்களில் புகழப்படுகின்றதைப் பின்னர் நோக்குவாம். இப்பாட்டிற் கண்டவன் பரணியிற் குறிக்கப்பட்ட பல்லவர் கோனாகக் கொள்ள வமையும்.

இது காறும் கலிங்கரோடு பொருவதற்குச் சென்ற பல படைத் தலைவர்களைச் சாசனச் சான்று கொண்டு அறியக் கூறினும். இப் போருக்குச் சென்றிருந்த பிற படைத் தலைவர்களை விக்கிரம சோழ னுலாவால் அறியப்படுவதைக் காட்டுவாம். இவ்வுலாவில் கருணாகரனுக்குப் பரணிச் சிறப்புக் கூறப்படுகின்றது. கலிங்க வெற்றிபெற்ற சிறப்பு சோழர் கோன், காலிங்கர் கோன், அனந்த பாலன், அதிகன் முதலியோருக்கும் உரியதாகக் கூறினர். விக்கிரம சோழ னுலா விக்கிரமன் காலத்துக் கலிங்கப் போருக்கு முந்திய காலத்தில் பாடப்பட்டதென முன்னர்க் கூறியிருப்பதை ஈண்டு நினைவு கூர்க. இச்சிறப்புடையோரும் குலோத்துங்கன் காலத்து முதற் போருக்குச் சென்றவராவர். இங்குக் கூறப்பட்ட காலிங்கர் கோன் கருணாகரனின் வேறானவோர் படைத்தலைவன் என்பது உணரற்பாலது. இவன் முன்னர்க் காட்டிய நின்றாடுவான் என்பவனாவன்.

சாசனத்தானும், இலக்கியத்தானும், கலிங்கப் போருக்குச் சென்ற படைத்தலைவர் தொகை பரணியிற் கூறப்பட்டவரின் தொகைக்கு மும்மடங்கு நான்மடங்காகுமென அறியலாவதை

யறிக. கலிங்கராகிய பகைவர் மிக்க வலியுடையராய் இருந்தமையின், இத்துணை பெரியதோர் படை திரட்டப்பட வேண்டிய தாயிற்று என்பது அறியத் தக்கது. கலிங்கரைக் கேவலமான வீரரெனக் கருதுவது பிழையாகும். அவரை வெல்வதற்கு விக்கிரமன் இளம்பருவத்தில் படைத் தலைவர் துணையின்றிச் சென்றானென்பதும் பொருந்தாது. மற்றும் கவிச் சக்கரவர்த்தி வாக்காகிய, "இலங்கைப் போருக்கு ஒற்றிரட்டித்தது கலிங்கப் போர்" என்பதனிற் பொதிந்துள்ள கருத்துக்கும் மாறுபடும்.

இதுகாறும் சாசன வாராய்ச்சியாலும், நூல்களின் கால வாராய்ச்சியாலும் கலிங்கப் போரை விரித்துரைக்க வியலும் என்பதனைக் காட்டினும்.

இனி, பரணி இயற்றப் பட்ட காலமும் வரையறுக்கலாகும். பரணி நூல் போருக்கடுத்த காலத்தே பாடப்படும் உண்மை மேற்காட்டிய வரலாற்றால் வலியுறுகின்றது. கலிங்கப் போர் கி. பி. 1095-க்கு முன்னராதல் வேண்டு மென்பது திண்ணமாதலின், பரணி நூலும் 1095-க்குப் பின்னர் இயற்றப் பட்டதெனக் கூற வமையாது. கலிங்கப் போரை யாராய்ந்த முன்னையோ ரெல்லாம் பரணி இயற்றப்பட்ட காலம் கி. பி. 1115-க்குப் பின்னராகுமென முடிவுகட்டி யிருப்பது நிலைபெறாதென்க. ஆராய்ச்சியாளர் இலக்கியத்தினை ஊன்றி யுணராதும் இலக்கியச் சான்றும், சாசனச் சான்றும் பொருந்துகின்றதா என்றதனை நோக்காதும் முடிவுரை பகர்வாராயினர். தமிழறிவு வாய்ந்தோரும் அவருரையைத் தழுவுவர்.

இனிக் காலிங்கர் கோன் என்னும் பெயரினை ஆராய்வாம். கலிங்கப்போருக்குச் சென்ற படைத்தலைவர்களின் நடுநாயகமாகக் கருணாகரன் விளங்கினான். கலிங்க வெற்றிக்குக் கருணாகரனே காரணமாவன் என்னும் கருத்தைப் பரணி யாசிரியர் அறிவுறுத்துகின்றார். காலிங்கர் கோன் என்னும் காரணப் பெயர்ச் சிறப்புக் கருணாகரனுக் கன்றி பிறிதொரு படைத் தலைவனுக் குரிய தாகாது. ஆயினும் இப்பட்டம் பிறனொருவனுக்கு வழங்கப்பட்டிருப்பதை விக்கிரசோழ னுலாவால்

அறியக் கிடக்கின்றது. இதனை முன்னர்க் காட்டினும், இதனுண்மைசாசனத்தாலும்அறியலாவதைக் காட்டுவாம். குலோத்துங்கன் 43-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கருணாகரன் தேவி சாசனத்தில் கருணாகரனுக்கு இச்சிறப்புக் கூறப்படாதிருப்பதை (முன்னர்க் காட்டியது) ஈண்டு நினைவு கூர்க. இதனான் இப்பட்டம் கருணாகரனுக்கு இடப்பட வில்லையெனத் துணியலாம்.

திருக்கோயிலூர் தாலூக்கா சித்தலிங்க மென்னும் ஊரில் கிடைக்கும் (367 of 1909) வடமொழிச் சாசனத்தில் காலிங்கராயன் என்னுமொருவன் பெயர் வந்துளது. இவனுக்குச் சபாநர்த்தகன், மானுவதாரன் என்னும் பட்டங்களும் வழங்கியுள. மற்றோர் சாசனத்தில் (369 of 1909) இப்பட்டங்களை யுடையவன் மணவிற் கூத்தன் என்னும் பெயரும் உடையவனாகத் தெரிகின்றது. இவன் குலோத்துங்கன் அமைச்சன் எனவும் கூறப்படுகின்றான்.

சிதம்பரத்தில் மணவிற் கூத்தன் என்பான் ஐம்பத்தைந்து பாடல்களில் பாராட்டப்பட்டுள்ளான். இவன் இப்பாடல்களில் அரும்பையர்கோன், தொண்டையர்கோன், காலிங்கர்கோன், மலைநாடு வென்றான், தென்னரை வென்றான், வடவேந்தரை வென்றான் எனப் பலபடப் பாராட்டப்பட்டுள்ளான்.

தில்லைப் பொன்னம்பலத்தைப் பொன் மய மாக்கினான். திருச்சுற் றமைத்தான். நூற்றுக்கால் மண்டபம் செய்தமைத்தான். புட்கரணியைக் கல்லா லமைத்தான். மூவர் பாசுரங்களைப் பொன்னேட்டில் வரைவித்தான்.

இவன் ஆற்றிய பணிகள் அதிகை முதலிய விடங்களிலும் காணப்படும்.

இவனுக்குரிய நாடு மணவிற் கூற்றம். மயிலையும் மல்லையும் இக் கூற்றத்தில் உள்ள வூர்களாகும். இதனான் இக்கூற்றம் சென்னை முதல் மகாபலிபுரம் வரையில் பரவி யிருந்ததென்பது தெளியப்படும்.

இக்காலிங்கராயன் ஆற்றிய பணிகள் எல்லாம் தன் னிறைவனை குலோத்துங்கன் கருத்தை முற்றுவிப்பதற்காகச் செய்யப்பட்டன என்னலாம். ஆபத்சகாயன் என்றொருவனும் முற்காலத்தில் கோயிற்பணி புரிந்துள்ளான் என்பது அரக்கோணம் தாலூக்கா கீழ்ப்பாக்கத்தில் கிடைக்கும் (35 of 1911) சாசனத்தால் அறியலாகும். இவன் காலிங்கராயன் புதல்வன் எனப்படுகின்றான். இச்சாசனம் விஜய நகரத்தரசர் காலத்ததாயினும், பணியாற்றப்பட்ட தலம் மணவிற் கூற்றத் தூராகக் கொள்ளவமையுமாதலின், இப்பெயர் கொண்டவன் மணவிற் கூத்தன் புதல்வனாகக் கொள்ளலாம். இஃதொக்குமென்னின், ஆபத்சகாயன் தன் தகப்பனுக்குக் கோயிற்பணி செய்வதற்குச் சகாயமாயிருந்தான் என்பது கருதலாகும். இக்காலிங்கராயன் வடமொழிப்பட்டமும், வடமொழிப் பெயருடைய புதல்வனும், வடமொழிச் சாசனப் புகழுமுடையவனாயிருந்ததை நோக்கின், வடமொழிப் புலமை யுடையவனாயும் விளங்கினான் என்னலாம். காலிங்கராயன் என்பான் ஒருவன் வடமொழி நூல் ஒன்று தொகுத்துள்ளதைப் பின்னர்க் கூறுவாம்.

இதுகாறும் மணவிற் கூத்தன் என்பவன் சிறப்புக்கள் எல்லாம் எடுத்துக்காட்டினேம். இவன் குலோத்துங்கன் காலத்தில் திகழ்ந்த பல்லவ குலத்தவனாவன். இவனுக்குக் காலிங்கராயன் என்னும் சிறப்பு தனிப்பட வழங்கியிருந்தது. காலிங்கர்கோன் என்று விக்கிரம சோழன் உலாவில் வருபவன் இவனேயாவன். இவனுக்குக் கூத்தன் என்னும் பெயருளதாகலின், இடர்க்கரம்பைச் சாசனத்தில் கண்ட நின்றாடுவான் எனப்படுகின்றவனும் இவனேயாவன். பரணியில் மூன்றாமுறையிற் கூறப்பட்ட பல்லவன் இவனே யாவன். இதனான் இவன் கலிங்கப் போரில் மற்றையோரினும் மிக்க வீரமுடையவனாகி விளங்கினானெனவும், அக்காரணத்தான் இவனுக்குத் தனிச் சிறப்பிடப்பட்டதெனவும் கூறலாகும். இப்பல்லவன் கருணாகரனுக்கு நெருங்கிய உறவினனாக இருந்தான் எனவும், இதனான் அவனுக் குரியதாகிய சிறப்புக் கூத்தனுக் குரியதாக்கப்பட்டது

எனவும் கூறலாகும். இச்சிறப்பைக் கருணாகரனே இவனுக் கிடும்படிச் செய்தான் போலும். இத்தகைய வரலாற்றான் இக் கூத்தன் கருணாகரனுக்கு இளையோனாகவும் கூறலாகும். கருணா கரன் வண்டுவராசன், வண்டையராசன் எனப் படுகின்றானாத லின், அவனாட்சிக்குரிய வூர் செம்மற்பட்டிலுள்ள வண்டலூராக வும் கொள்ளவமையும். இவ்வூர் மணவிற் கூற்றத் துள்ளதோ ரூராகும். மணவிற் கூத்தனுக்குக் கீழ்ப்பட்டவனாகக் கருணா கரன் இருந்தவனாவன். கூத்தனும் கருணாகரனும் நெருங்கிய உறவுடையவராய் இருந்தாரென்பதற்கு இதுவோர் சிறந்த சான்றாகும்.

இனிச், "சூத்ர ரத்நாகரம்" என்னுமோர் வடமொழித் தொகுப்பு நூல் திருவநந்தபுரம் கலைமகள் சாலையி லிருந்ததைக் கண்டு வெளியிட்ட பெருமை திரு. ஏ. எஸ். இராமநாத ஐயரவர்களுக் குரியதாகும். இந்நூலுக்குக் "குலசேகர" என் னும் அடை கொடுக்கப்பட்டுளது. நூலைத்தொகுத்தவர் காலிங் கன் என்னும் பெயருடையவர் என்பதும், அவருக்கு அருளா கரன் என்னும் மறு பெயர் இருந்த தென்பதும், அவர் தன் னிறைவன் நாமத்தை இட்டனரென்பதும், அவர் அமைச்சனாய் விளங்கினா ரென்பதும் புலப்படுவதைக்கொண்டு, இந்நூலைத் தொகுத்தவன் குலோத்துங்கன் காலத்தவனான கருணாகரனே யாவன் என்னும் முடிபை யுரைத்தார்.

யாம் மேற்காட்டிய வாற்றான் காலிங்கன் என்னும் சிறப்பு கருணாகரன் வகிக்கவில்லை யென்பது தெளியப்பட்டதாகலின், இந்நூலைத் தொகுத்தவன் மணவிற் கூத்தனே யாவன் என்பது உண்மையாகும்.

(தொடரும்.)

# "சிருங்கார ரஸம்"
## இன்பச் சுவை

பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்
திருச்சிராப்பள்ளியில் வானொலியிற் பேசியது.

"சிருங்கார ரஸம்" என்பது தமிழில் இன்பச்சுவை என்று கூறப்படும். சுவைகள் பலவற்றுள்ளும் இதுவே சிறந்ததெனக் கொள்ளப்படுகின்றது. திருக்குறள், காமத்துப்பால் அவதாரிகையில், "ஈண்டு இன்பம் என்றது ஒருகாலத்து ஒருபொருளால் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம வின்பத்தினை. இச்சிறப்புப்பற்றி வட நூலுட் போசராசனும், 'சுவை பல வென்று கூறுவார் கூறுக; யாம் கூறுவது இன்பச்சுவையொன்றனையுமே.' என இதனையே மிகுத்துக் கூறினான்." எனப் **பரிமேலழகர்** பகர்ந்தனர். காம வின்பமானது ஒருகாலத் தொரு பொருளால் ஐம்புலனும் நுகரும் பான்மையது என்னும் ஒள்ளிய கருத்தினை, "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள." என்னும் **வள்ளுவர்** வாய்மொழி தெள்ளிதின் விளக்கும்.

**ஆசிரியர் தொல்காப்பியனார்** இச்சுவைக்கு உவகை என்று பெயர் கூறி,

"செல்வம் புலனே புணர்வு விளையாட் டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே."

என்னும் சூத்திரத்தால், உவகைச் சுவைக்குப் பற்றுக் கோடானவை செல்வமும், அறிவும், புணர்ச்சியும், விளையாட்டும் ஆகுமெனவிளம்பினர். அவர், ஏனைய நகை முதலிய சுவைகளைப் போன்றே இதனையும் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாக ஓதியுள்ளார். அகப் பொருளாகிய இன்பத்திற்கு இச்சூத்திரத்துள்ள புணர்வு என்பதனாற் குறிக்கப்படும் காதலே ஆதாரமாகும். செல்வம் முதலாயின வெல்லாம் அதற்குத் துணையாகும் இயல்பினவே.

அகப்பொருளாவது, "ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம். அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்தது எனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருள்." என்பர் நச்சினார்க்கினியர். அங்ஙனம் ஒத்த அன்புடைய இருவரும் கூடியொழுகும் ஒழுக்கத்தைக் களவொழுக்கம் எனவும், கற்பொழுக்கம் எனவும் இரண்டாகப் பகுத்துரைப்பது தமிழ் நூன் முறை. அவற்றுள் களவாவது, உருவும், திருவும், பருவமும், குலனும், குணனும், அன்பும் உடைய தலைமகனும் தலைமகளும் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றிப் பால்வகையால் தாமே எதிர்ப்பட்டுக் கூடியொழுகுவது. கற்பாவது அவ்விருவரும் முறைப்படி வரைந்துகொண்டு இல்லத்திலிருந்து அறம் புரிந்து ஒழுகுவது.

புணர்வு என்பது, மெய்யுறு புணர்ச்சியை அன்றி, உள்ளப் புணர்ச்சியையும் குறிக்கும். உள்ளப் புணர்ச்சியாவது அன்பால் இருவர் உள்ளமும் கலத்தல். எனவே, இவ்வொழுக்கத்திற்கு அடிப்படையானது அன்பு அல்லது காதல் என்பது பெறப்படும். இப்பிறப்பிலே யாதொரு முற்றொடர்பும் இன்றிக் கண்ட மாத்திரத்தே அவர்களுக்குள் உண்டாகும் இக் காதலுக்குக் காரணம் முற்பிறப்பின் தொடர்ச்சியே ஆதல் வேண்டுமன்றோ? எனவே, தலைவன் தலைவியர்க்குள் தோன்றி வளரும் இவ்வன்பானது எழுமையும் தொடரும் உழுவலன்பாம் என்பது பெறப்படும்.

இவ்வுண்மை,

> "ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப."

என்று தொல்காப்பியரால் கூறப்பட்டுள்ளது. எல்லாப் பிறப்பினும் உயிரொன்றி ஒருகாலைக் கொருகால் அன்பு முதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால்வரை தெய்வத்தின் ஆணையாலே ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்ப்படுவர் என்பது அதன்

பொருளாகும். இத்தகைய அன்பின் மேன்மையும், திணிமையும், சீர்மையும் தமிழ் நூல்களிற் பலபடியாகப் பாராட்டப் படுகின்றன.

" மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்."

என்றார் திருவள்ளுவர். தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் புறப் பொருளைக் காட்டிலும் அகப் பொருளே விரித்தும் மிகுத்தும் கூறப்பட்டுளது. அவை யாவும் அன்பின் சிறப்பை விளக்குவனவே யாகும். மெய்ப்பாட் டியலுள்ளும் அகப் பொருள் பற்றிய நிகழ்ச்சிகளே விரித்துரைக்கப்பட்டுள்ளன. மற்றும், ஆலவாய்ப் பெருமான் அருளால் அகப்பொருணூல் ஒன்று வெளியாயதும், அன்பே வடிவாகி, இன்ப வெள்ளத்திற் றிளைத்த மாணிக்கவாசகப் பெருமான் அகப் பொருட் கோவை யொன்று அருளியதும் அகப் பொருளின் விழுப்பத்திற்கு உறு சான்றாகும். அன்பு என்பது மக்கள் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஊடுருவிச் சென்று பயன் விளைப்பதாகலின், அதனை விளக்குவதாகிய அகப் பொருளைச் சான்றோர் பலரும் இங்ஙனம் விரித்துரைத்தா ராவர்.

இனி, காதலால் இருவர் நெஞ்சமும் கலத்தலைப் புலப்படுத்தி, இன்பச் சுவையை நன்கு தோற்றுவிக்கும் குறுந்தொகைச் செய்யுள் ஒன்றை நோக்குதும்.

" யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே."

தெய்வத்தால் நிகழ்ந்த கூட்டத்தின் பின்பு தலைவியானவள், தலைவன் தன்னைப் பிரிவானோ என ஐயுற்றதனைக் குறிப்பா லறிந்து, "என் தாயும் நின் தாயும் முன்பு எத்தகைத் தொடர்பினர்? என் தந்தையும் நின் தந்தையும் எம்முறையில் உறவினர்? யானும் நீயும் முன்பு எவ்விடத்தில் அறிந்துள்ளோம்? இம்மூன்றும் இல்லையாகவும் செந்நிலத்தில் பெய்த நீர்போலத் தெய்வத்தின்

தூண்டுதலால் நம் இருவர் நெஞ்சமும் கலந்து ஒன்றுபட்டன வாகலின் இனிப் பிரிவு என்பதும் உளதோ?" எனத் தலைவன் கூறினன் என்க.

" தேவரிற் பெற்றநம் செல்வக்கடி வடிவார் திருவே
யாவரிற் பெற்றினி யார்சிதைப்பார் "

என்னும் மணிவாசகர் திருவாக்கும் இக்கருத்தினதே.

மிதிலையில் திருவீதியிற் சென்றுகொண்டிருந்த இராமனும், கன்னிமாடத் தும்பரில் நின்ற சீதையும் ஒருவரை யொருவர் கண்டு காதல்கொண்டதனைத் தெரிவிக்கும் கம்பநாடர் கவிதைகள் பெரிதும் இன்பம் பயப்பன வாகும்.

" எண்ணரு நலத்தினள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கௌவி யொன்றையொன்
றுண்ணவும் நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்."

" பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை யொருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினர்."

திருமண நிகழ்ச்சியின் முன்பு அவ்விருவரும் ஒருவரை யொருவர் கண்டனராக வான்மீகி கூறாதிருப்பவும், தமிழ்மரபு கருதியே கம்பர் இங்ஙனம் சித்திரிப்பா ராயினர். இருவருடைய காட்சியின் இயல்பையும், அதனோடு ஒருங்கு நிகழ்ந்த உள்ளக் கலப்பையும் தெரிவிக்கும் அவரது வித்தகக் கவித்திறத்தை எங்ஙனம் விளம்ப வல்லேம்?

இனி, அன்பால் உள்ளங் கலந்த தலைவன் தலைவியர்க்குள் நிகழும் கூட்டம், பிரிவு, ஆற்றியிருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐவகை யொழுக்கங்களில், இரங்கலும் ஊடலும் முறையே அழுகையும் வெகுளியுமாகத் தோன்றினும், அவை காதலைச் சிறப்பிப்பனவே யாதலின், அவற்றையும் இன்பச் சுவை யென்றே கோடல் வேண்டும். ஆனால், பழைய கற்பாவது ஒரோவழி அவை ஒருங்கியைந்து வருதலும், இன்னது இதுவெனத்

துனியலாகாவாறு மயங்கி வருதலும், வியப்பு முதலிய ஏனைச் சுவைகளோடு விரவி வருதலும் உண்டு. கணையாழியைப் பெற்ற கற்பினுக் கணியாய சீதை எய்திய நிலைமையைத் தாசரதிக்கு உரைக்கும் மாருதியின் கூற்றில் அமைந்த,

"ஒருகணத் திரண்டு கண்டேன் ஒளிமணி யாழி ஆன்ற
திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலும் செல்வ நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னுல்வெந்
தருகிய துடனே ஆறி வலித்தது குளிர்புள் ளூற."

என்னும் அருமைச் செய்யுளின் சுவை பல்கால் நுகர்ந்து இன்புறற்பாலது. பிராட்டி தன் மார்பில் அணைத்த ஆழி யானது விரகத்தால் உண்டாய வெப்பத்தால் உருகியதும், உவகையால் ஆய தட்பத்தால் ஆறி இறுகியதும் ஒருங்கு நிகழ்ந் தனவாகக் கூறப்படுதலின், இதன்கண் அழுகை, உவகை என் னும் சுவைகள் இயைந்துள்ளமை பெறப்படும். ஒருகணத்து இரண்டும் நிகழ்ந்தன என்றமையால், வியப்புத் தோன்று நிற்கும். இவற்றுள் வியப்பும், அழுகையும் உவகையைச் சார்ந்து அதனைச் சிறப்பிப்பனவாகக் கொள்ளுதல் தகுதியாம்.

கண்ணகியின் காற்சிலம்பை முதலாகக்கொண்டு வாணிகஞ் செய்தல் கருதி, மதுரைக்கேகும் கோவலன், செல்லும் நெறியில் மாதவி விடுத்த ஓலையைக் கோசிகன் என்னும் மறையோனுற் பெற்று, அதன் மடிப்புறத்து மண்ணின்மீது மாதவி குறுநெறிக் கூந்தலால் ஒற்றிய இலச்சினையைக்கண்டு, அது தன்னுடன் கூடிய காலத்தே வாச நெய் பூசிய தன்மையை உணர்த் திற்று ஆகலான், அதனை விரைவில் விடுவியாதிருந்தனன் என் பதில் மெய்ப்பாடு இன்னதெனத் துணிதற் கரிதாகின்றது.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே."

என்னும் தலைவி கூற்றில் வியப்பும் இன்பமும் விரவியுள்ளன. இனி, தலைவன் கூற்றிலும் தலைவி கூற்றிலும வரும் சுவை மிக்க

பாட்டுக்களில் ஒவ்வொன்று காட்டுதும். திருக்கோவையாரில் உள்ளி,

> " சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
> நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
> பொற்பார் அறிவார் புலியூர்ப்புனிதன் பொதியில் வெற்பில்
> கற்பாவிய வரைவாய்க் கடிதோட்ட களவ கத்தே."

என்னும் அருமைச் செய்யுளும், தலைவனானவன், "'நல்வினைத் தெய்வம் இவளைக் களவின்கட் கூட்ட அமுதமும் அதன்கட் கரந்து நின்ற சுவையும் என்ன என் நெஞ்சம் இவள்கண்ணே யொடுங்க, யான் என்பதோர் தன்மை காணுதொழிய, இருவர் உள்ளங்களும் ஒருவேம் ஆமாறு கரப்ப, ஒருவேமாகிய ஏகாந்தத் தின்கட் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் யாவரான் அறியப்படு'மென்று மகிழ்ந் துரைத்தான்; உரைப்பக் கேட்ட தலைமகளும், 'எம்பெருமான் என்கண் வைத்த அருளினலன்றே இவ்வகை அருளிய' தென்று இறப்பவும் மகிழ்வாளாம்." எனப் பேராசிரியர் விளக்கிய அதன் கருத்தும் இன்பச் சுவையை இனிது புலப்படுத்தாநிற்கின்றன.

> " நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
> என்றும் என்றோள் பிரிபறி யலரே
> தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
> சாந்திற் றொடுத்த தீந்தேன் போலப்
> புரைய மன்ற புரையோர் கேண்மை
> நீரின் றமையா வுலகம் போலத்
> தம்மின் றமையா நந்நயந் தருளி
> நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
> சிறுமை யுறுபவோ செய்பறி யலரே."

இந் நற்றிணைச் செய்யுளில், தலைவியானவள், தான் வருந்தும்படி தலைவர் தன்னைப் பிரியார் என்று தோழிக்குக் கூறுபவள், அதற்கு ஏதுவாக, தலைவர் நிலைபெற்ற வாய்மையை உடையர் என்றும், நெடிது தோன்றும் இனிய குணங்களுடையர் என்றும் உரைப்பதும், அவருடைய நட்பானது தாமரையின் தாதினையும் சந்தனத்தின் தாதினையும் ஊதிச் சந்தன மரத்தில் வைக்கப் பெற்ற தேன்போல மேன்மையுடையதென்று விளம்புவதும் இன்பம் பயக்கின்றன. இதிலுள்ள உவமையானது இருவர்

உள்ளத்தின் தூய்மையையும் ஒத்த அன்பின் சீர்மையையும் இனிது விளக்குதல் காண்க.

இனி, அன்பு என்பதன் இயல்பும், அதனால் விளையும் நலங்களும் மனோன்மணீய நாடகத்தில் வாணியின் கூற்றில் வைத்துக் கூறப்பட்டிருப்பன அறிந்து மகிழற்பாலன.

" ......................நேயமும்
ஆக்கப் படும்பொருள் ஆமோ ? நோக்கில்
துன்பே நிறையும் மன்பே ருலகாம்
எரியுங் கானல் விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சம் சிறிது
தங்கி அங்கவர் அங்கங் குளிரத்
தாருவாய்த் தழைத்தும், ஓயாத் தொழிலில்
நேருந் தாகம் நீக்குவான் நிமல
ஊற்று யிருந்து அவருள்ளம் ஆற்றியும்,
ஆறலை கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாய்அவர் நெறிமுறை காத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்றுகோ லாய்அவர் ஊக்கம் உயர்த்தியும்,
இவ்விதம் யாரையும் செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற்கு அளவுகோ லாகி,
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்,
இல்லறம் என்பதன் நல்லுயி ரேயாய்,
நின்ற காதலின் நிலைமை, நினையில்,
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றும் தன்மை யன்றி, ஒருவரால்
ஆக்கப் படும்பொருள் ஆமோ ?

இதுகாறும் கூறியவற்றால், 'பிறப்பே குடிமை' என்னும் சூத்திரத்தில் தொல்காப்பியர் கூறிய ஒற்றுமை பலவு முடைய தலைவனும் தலைவியும் அன்பாற் கலந்து வாழும் ஒழுக்கத்தைத் தெரிவிக்கும் பாவாணரின் செய்யுட்களில் அமைந்த சுவையே இன்பச் சுவை அல்லது "சிருங்கார ரஸம்" ஆகும் என்பது பெறப்படும்.

உ

# பழநிக் கும்பாபிடேகம்

திரு. மு, சாமி. சிவராமபிள்ளை தஞ்சாவூர்.

இக் குடமுழுக்குச் (கும்பாபிடேகம்) செயல்முறை, இந்து மத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் ஆதரவில், சர். பி. டி. இராஜன், திவான் பகதூர் இரத்தினசபாபதி முதலியார், சைவத்திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார், பழயகோட்டைப் பட்டையக்காரர், சங்கராண்டான் பாளையம் பட்டையக்காரர் மேற் பார்வையில், சைவ அறிவுநூல் (சிவாகம நூல்) கற்றுணர்ந்து தெளிந்தோராய சைவ அந்தணப் பெரியார் ஈசான சிவாச்சாரியார் அவர்கள், சைவ அறிவு நூலுக் கேற்பச் செயல் முறை காட்ட, கடவுள் மங்கலஞ் செய்தல் (பிரதிட்டை), வேட்டல் (சிவ யாகம்) முதலான நிகழ்ச்சிகள், பழநியிலும், பிற ஊர்களிலும் உள்ள சைவக் குருக்கண்மார்களால் செய்யப் பெற்று, விதிமுறை தவறாமல் செம்மையுற நடைபெற்றது.

திருமறையோதுவார், குருக்கண்மார், சிவச் சார்புடைய சைவர்கள், துறவிகள், அந்தணர், வேதமோதுவோர், செல்வர் கள், ஏழைகள், மற்றும் பல திறப்பட்டவர்கள் ஆய எல் லோருக்கும் வகை வகையாகப் பற்பல இடங்களில் உணவு முதலாய நலங்கள் குறைவின்றி நிகழுமாறு செய்யப் பெற்ற ஏற்பாட்டுத் திறம் போற்றத் தக்கது.

இப்பெருந் தெய்வ நலப் பேற்றைச், சென்னை அற நிலையப் பாதுகாப்புக் கழக ஆணையாளர் திருவாளர்கள் மன்னாடி நாயரும், இராமச்சந்திரன் செட்டியாரும், திருவாளர்கள் எஸ். முத்தையா முதலியார், எம். சம்பந்தமுதலியார், பொன்னய்யக் கவுண்டர், பீமைய செட்டியார், சி. எ. நஞ்சப்பக் கவுண்டர் முதலாய தக்கோர்களும், திரு. அழ. சுப. பழ. சுப்பிரமணியஞ் செட்டியார் முதலாய நகர வணிகச் செல்வர்கள் பெரும்பாலரும் மகிழ்வுடன் கண்டு இன்புற்றார்கள்.

சென்னை முதலாய பல வூர்களிலிருந்து பல சொற்பொழி வாளர்களை விரும்பி அழைத்து, நான்கு நாட்கள் முற்பகல், பிற் பகல்களில் முருகப் பெருமான் உண்மைச் சிறப்புகளைப் பலபடி யான சொற்பொழிவுகளால் விரித்துரைக்கச் செய்து, எல்லா மக்களும் கேட்டு உணர்ந்து உய்யுமாறு செய்தமை பெரிதும் வியந்து பாராட்டத் தக்கதாகும்.

இவ்வாறு பல திறப்பட்ட வழிகளில் ஒவ்வொரு செயல் முறைகளும், ஏது குறையுமின்றி அவ்வவை அவ்வத் துறை களில் சீருஞ் சிறப்பும் அமைய நிகழ்ந்தமைக்கு அடிப்படையா யிருந்தன, பழநி யாண்டவன் கோயில் செயலாளர் (எக்ஸி கியூட்டிவ் ஆபீசர்) திருவாளர் ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை யின் தூய்மையும், மனத்திட்பமும், பல கடவுள் நிலையங்களில் (தேவதானங்களில்) தலைமைப் பொறுப்பு தாங்கிப்பெற்ற செய லாற் றறிவின் திறமும், ஆண்டவன்பால் அவர்கள் கொண்ட அன்பும், இவை எவற்றினும் மேலாக அப்பெருமான் திரு வருளுமே யாம்.

---

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்

## நன்கொடைகள்.

| சங்கத்திற்கு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஓர் தமிழன்பர் | 10 | 0 | 0 |
| **கல்லூரிக்கு** | | | |
| திரு. அ. நே. அ. ஜினகுமாரமுதலியார் அவர்கள் | 0 | 8 | 0 |
| அரசியலார் கொடை (Grant) | 649 | 14 | 0 |

| திக்கற்ற மாணவ ரில்லத்திற்கு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், மகன் திருமணம் | 10 | 0 | 0 |
| ,, T. R. விசுவநாதபிள்ளை அவர்கள் (Asst. Engr.) தாயார் நாள் கருதி உணவளிக்க | 10 | 0 | 0 |
| ,, R. கனகசபாபதி நாயகர் அவர்கள், S. P. M. தாயார் நாள் கருதி உணவளிக்க | 2 | 0 | 0 |
| ,, N. P. சுந்தரம்பிள்ளை அவர்கள் (D. B. Engr.) முத்திங்கள் கொடை | 9 | 0 | 0 |
| கைலாய அறநிதி ஆண்டு வரவு | 40 | 0 | 0 |

| | | | நெல் கலம் |
|---|---|---|---|
| திரு. G. இராமசாமி பிள்ளை | அவர்கள், | கரந்தை | 20 |
| ,, மஞ்சையா பிள்ளை | ,, | அம்மன்பேட்டை | 4 |
| ,, கோவிந்த பிள்ளை | ,, | ,, | 1 |
| ,, வேங்கடாசலம் பிள்ளை | ,, | ,, | 1 |
| ,, சதாசிவம் பிள்ளை | ,, | ,, | 1 |
| ,, புண்ணியமூர்த்திப் பிள்ளை | ,, | ,, | 1 |
| ,, பரிமண பண்டிதர் | ,, | ,, | 1 |
| ,, பெருமாள் வைத்தியர் | ,, | ,, | 1 |
| ,, குமரசாமி பிள்ளை | ,, | ,, | ½ |
| ,, அப்பாவுப் பிள்ளை | ,, | ,, | ½ |
| ,, சொக்கலிங்கம் பிள்ளை | ,, | ,, | ½ |
| ,, சிவசாமி பிள்ளை | ,, | ,, | ½ |
| ,, திருவேங்கடம் | ,, | ,, | ½ |
| ,, துரைசாமி பிள்ளை | ,, | ,, | ¼ |
| ,, இரத்தினத் தம்மை | ,, | ,, | ¼ |
| ,, இராமசாமி ரெட்டியார் | ,, | பள்ளியகரம் | 2 |

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.